261

261

உஷா கலியாணம் என்னும்

வாணாசூரன் சண்டை நாடகம்

OFFICE ...
12 JUL 1935

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

பூமகள்விலாச அச்சுக்கூடம்

சென்னை

1935 [அணா 6

Registered Copy Right

O-,892 MRS,U
N35
7490

உ
கடவுள் துணை

உஷா கலியாணம் என்னும்

வாணாசூரன்
சண்டை நாடகம்

இது
திருக்கோவிலூர் தாலுக்கா தேவனூர்கிராமத்திலிருக்கும்
சுப்பராயலு நாயுடு குமாரர்

இராமசாமி நாயுடு அவர்களால்

இயற்றியது.

திருக்கோவிலூர் புத்தகவியாபாரம்
கோ. கிருஷ்ணசாமிநாய்க்கர் & பிரதர்ஸ்
அவர்களிடம் சுதந்தரம் பெற்று,
அ. முத்துவடிவேல் முதலியாரால்
பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
சென்னை
1935

இதன் விலை] (ரிஜிஸ்டர் காபிரைட்) [அணா 6

ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனுல் சகல அச்சுக்கூடத்ததிபர்கட்கும் மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில், ம-ா-ா-ஸ்ரீ, இராமசாமி நாயுடு அவர்களால் இயற்றிய "உஷா கலியாணம் என்னும் வாணுசூரன் சண்டை நாடகம்" ஆகிய இப்புத்தகத்தை திருக்கோவிலூர் புத்தக வியாபாரம் கோ. கிருஷ்ணசாமி நாய்க்கர் & பிரதர்ஸ் அவர்களிடம் சகல சுதந்தரமும் பெற்று அடியிற்கண்ட என்னுல் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளேன். இப்புத்தகத்தை மகாகனம் பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்கள் சட்டப்படி காபிரைட் செய்திருக்கின்றேன். ஆகையால் இப்புத்தகத்தை என்னுத்தரவின்றி யாரும் அச்சிடக்கூடாது.

இப்படிக்கு

அ. முத்துவடிவேல் முதலியார்.

உ

கடவுள் துணை

உஷா கலியாணம் என்னும்

வாணாசூரன் சண்டை நாடகம்

விநாயகர் கவி

அத்திமாமுகனையீன்ற அறுமுகன்பாதம்போற்றி
சித்திக்குமணாளனை தேவனூர்தன்னில்வாழும்
சத்தியின்புதல்வா உன் தாளடிவணங்கிநின்றேன்
பத்தியாய்பரமன்பாலா பணிந்துநான்கரங்குவித்தேன்.

மாரியம்மன் கவி

அரனிடதேவியான அறுமுகன் தன்னையீன்ற
தேவனூர்குளக்கரையில் திவ்வியமாரியேஉந்தன்
பாதமதைராமசாமி பரிவாகபோற்றிசெய்தேன்
ஆவலாய்என்னைநீரும் அன்புடன்காக்கவேண்டும்.

மாரியம்மன் தரு

தேவனூர்தன்னில்வாழும் திரிசூலி அம்பாள்
தஞ்சமென்றுனைப்பணிந்தேன் அஞ்சலிபுரிகபாலி
அஞ்சியேவேப்பிலைதாரி பஞ்சவர்ணன்சகோதரி
கொஞ்சியேஅன்னத்திலேறி பஞ்சைகளைகாக்கும்மாரி தே
கையில்கபாலமுடன் கப்பலைஉடைத்தவள்நீ
காரிழையேஉன்மகிமை யாரறியப்போறேமம்மா தே

வாணாசூரன் வருகிற கவி

அண்டரண்டம்கிடுகிடென ஆர்ப்பரித்துதோள்தட்டிஅதிரபூமி
சண்டனிவனெனவே தேவர் தாள்வணங்கிகைகட்டிநிற்க
கண்டவர்கள்பயந்தோட காவலர்நெருங்கிசூழ
பாவையர்கள்நடனமாட வாணாசூரனும்வருகின்றானே.

தரு

தீரன்வாணாசூரன்வந்தனனே சூராதிசூரன்
தீரன்வாணாசூரன்வந்தனனே
தீரவாணாசூரன்வந்தேன் தேவர்யாவரும்பயந்துநடுங்கிட தீ

அண்டரண்டமும்கிடுகிடுவென்றிடவே எந்தனைகண்டு
அசுரர்யாவரும்பயந்துஓடிடவே
சுருள் சண்டனென்னவே தாள்வணங்கிட
சகலதேவரும் கண்டுபயந்திட தீ

குந்திபட்டணம்தன்னையாண்டவனும் வாணாசூரன்
கோவேந்தர்கப்பம்கட்டிடவே
சுருள் பந்திபந்தியாய்மாதராடிட பாவையர்இருபுரமும்சூழ்ந்திட
கந்தகளபமும்வாடைவீசிட கன்னியர்நடனமாடிட தீ

எந்தனைஎதிர்த்திட்டதொரு கிருஷ்ணன்தன்னை
இன்றுதினமேமடிப்பேனென்றுமே
சுருள் கயிலைவாசனை மனதிலெண்ணியே
காத்தென்னையே நித்தம்கோரிய தீ

வாணாசூரன் கவி

என்னிடஅருகிலிருக்கும் இயலுள்ளமந்திரிகேளாய்
நன்னகர்குந்திபட்டணத்தில் நலமுடன்மாதமும்மாரி
செம்மையாய்மழைகள்பெய்து சீருடன்குடிகளெல்லாம்
நன்மையாய்இருக்கின்றாரா நவிலுவாய்எனதுமந்திரி.

வசனம்

ஆனால் கேளுங்கள் மந்திரிமாரே! நமது குந்திபட்டணத்தில் மாதமும்மாரிபெய்து விளைவு வெள்ளாண்மை மிகுதியாக விளைந்து நமது பட்டணத்திலுள்ள குடிகள் எல்லாம் க்ஷேமந்தானா சொல்லும் மந்திரி.

வசனம்

ஆனால் வாருமப்பா மந்திரிமார்களே! யானோ பரமசிவனை நோக்கி தவம் செய்து மும்மூர்த்திகளையும் ஜெயமடையும்படியாக தவஞ்செய்யப்போகின்றேன். நீங்கள் பட்டணத்தையும் என் மகளாகிய உஷா என்கிற பெண்ணையும் பாதுகார்த்து வாரும் மந்திரி.

பொது வசனம்

அகோதெப்படி என்றால் இந்தப்பிரமாக வாணாசூரன் மந்திரிகளிடத்தில் பட்டணத்தை ஒப்பித்துவிட்டு தவத்துக்கு போகிற விதங்காண்க.

வாணாசூரன் தரு

தவஞ்செய்யவேநடந்தான் வாணாசூரன்
தவஞ்செய்யவே நடந்தான்
தவஞ்செய்யநடந்தானே தவயோகிபோலவே
காவிகாம்பரமணிந்து கனத்தருத்ராட்சம்பூண்டு த

காலனையுதைத்திட்ட கர்த்தனைகோரியே
தேவர்க்கமுர்தம்ஈய்ந்த தேவதேவராட்சகா
காரும்காருமென்னை கையில்மழுமான்தரித்தவா த

வசனம்

அரகரா மகாதேவா சம்போசிவசங்கரா கையில் மழுமான் தரித்தவா சூலகபாலம் பிடித்தவா அடியேன்செய்யும் தவத்திற்கு இரங்கிவந்து கோரியவரத்தை தரவேண்டும் கர்த்தனே.

பொது வசனம்

அகோதெப்படி என்றால் இந்தப்பிரகாரமாக குந்திபட்டணத்தை ஆளாநின்ற பாணாசூரனானவன் பரமசிவனைநோக்கி தவஞ்செய்கின்றபோது வெள்ளியங்கிரியை பீடமாக அமைத்திராநின்ற முக்கண்படைத்த பரமசிவன் வாணாசூரன் தவத்துக்கு இரங்கி கொலுவுக்குவருகிற விதங்காண்க.

பரமசிவன் வருகிற கவி

கேட்டவர்க்குவரம்பாலிக்கும் கீர்த்திபிரதாபனான
பார்த்தவர்யெவரும்மெச்ச பார்வதிசமேதரான
கார்வண்ணன்மைத்துனனான கெங்கையைதரித்தஈசன்
பாருலகத்தோரும்மெச்ச பரமரும்வருகின்றாரே.

பரமசிவன் தரு

வெள்ளியங்கிரியில்வாசன் விண்ணவர்தனக்குநேசன்
விமலன்கொலுவதாகினார் பரமசிவன்
விமலன்கொலுவதாகினார்

அரகராவென்றபேருக்கு அன்புடன்வரம்பாலிக்கும்
அரன்கொலுவதாகினார் பரமசிவன்
அரன்கொலுவ தாகினார்

பூண்டருத்திராட்சமாட பூவையர்சங்கீதம்பாட
பொங்கரவமணிந்த பூவைக்குகந்தநேசன்
போற்றிடும்நேசன்அருள் சாற்றிடும்வாசன்

சுருள் பூவையர்தன்னையே மணம்புரிந்திடுவாசன்
ஆவலாய்தேவர்க்கமுர்தம் அளித்திட்டவாசன் வெ

சலந்திராசூரனைநான் க்ஷணநேரத்தில்மடித்தேன்
சங்கராவென்றபேருக்கு சார்ந்துமந்திரம்செபித்தேன்
சரவணப்பொய்கையில்நெற்றி பொறிதனைவிடுத்தேன்

சுருள் உமையவள்மகிழகுழந்தை உருவமுமாக்கினேன்
ஆறுமுகனென்று அகிலத்தில்பேருண்டாக்கினேன் வெ

விருத்தம்

என்னிடஅருகிலிருக்கும் யெழிலுள்ளநந்திகேளாய்
பந்தமாய்எனதுதேவி பார்வதிதன்னைநீங்கள்
விந்தையாய்அரண்மனைக்கு விரைவினில்நீங்களோடி
பரமரும்அழைத்தாரென்று பாவையைஅழைத்துவாரீர்.

வசனம்

ஆனல்வாரும் நந்திகாவலனே எனது தேவியாகிய பார்வதியை நாம் அழைத்தோமென்று அதிகசீக்கிரத்தில் அழைத்துவாரும் நந்தி.

பொது வசனம்

அகோதெப்படி யென்றால் இந்தப்பிரகாரமாக பரமசிவன் கொலுவீற்றிருக்க அந்தசமயத்தில் பார்வதி கொலுவுக்கு வருகிற விதங்காண்க.

பார்வதி வருகிற கவி

நாதனுர்அழைத்தசேதி நங்கையாள்காதில்கேட்டு
பொங்கமாய்பூவைமார்கள் புகழ்ந்துஆலாத்தியேந்த
சிங்காரமண்டபத்தைவிட்டு திகம்பரியாளுமேதான்
சங்கரன்தேவியான தையலும்வருகின்ருளே.

பார்வதி தரு

பாருலகத்தோர்போற்ற பரமன்யிடபாகமமர்ந்த
பார்வதாதேவிவந்தாள் நல்ல
பச்சைக்கிளியெனவேஉச்சிதமாக பார்வதாதேவிவந்தாள்

இடையிலணிந்தஆடை எங்கும்பளபளென்ன
ஈஸ்வரிமாதுவந்தேன் இருகைவளையல்கலகலவென்றிட
ஈஸ்வரிமாது வந்தேன்

பார்த்தோர்அதிசயிக்க பஞ்சவர்ணகிளியோவென்ன
பைங்கொடிமாதுவந்தேன் பாவையர்இருபுறம்ஆவலாய்
சூழ்ந்திட பைங்கொடிமாதுவந்தேன்

கண்டோர்அதிசயிக்க காமாட்சிஇவளோவென்ன
கார்மேகன் தங்கையான கன்னியும்வாரேன்
கர்த்தனிருபாதம் நித்தமேகோரி
கார்மேகன் தங்கையான கன்னியும்வாரேன்

பஞ்சபாண்டவர்க்காகநான் பாவையுருவமாரி
பாஞ்சாலியென்ற பேருமெடுத்தேன்
பத்தியாய்ராமசாமிபாடல் நித்தமும்கோரி
பாஞ்சாலியென்ற பேருமெடுத்தேன்

பார்வதி தரு

நாதனேசரணம் கைலைவாழும்மலர்
பாதனேசரணம்

நாதனேஉன்பாதம் நங்கையாள்பணிந்திட்டேன்
ஆதரவாகவே அன்புடன்காத்தருள் நா

பரமசிவன் தரு

எந்தனிடபாகம்தன்னில் ஈஸ்வரியாளேபெண்ணே
எந்நாளுநீஇடைவிடாமல் வீற்றிருப்பாயேசொன்னேன்

ஆசீர்வாதம்நானளித்தேன் அந்தரியாளேநீர்
அனபுடன்வாழ்ந்திருப்பாய் பார்வதியாளே எ

பார்வதி தரு

என்னை அழைத்ததேனோ நாதா
இன்பமுடனுரைப்பீர் வேதா

கன்னியாள் எந்தனுக்கு களிப்புடனே நீரும்
கட்டுவார்த்தையை விட்டு ஒட்டும் — எ

பரமசிவன் தரு

உன்னையழைத்த சேதி பெண்ணே இப்போ
உரைசெய்வேன் கேளடி பெண்ணே

குந்திப்பட்டணமாளும் சூரன் நம்மை
கோரி தவம் செய்கின்றான் தீரன்

கோதையே நாம் சென்று கொடுக்கவேண்டும்
வரம் தானும் பெண்ணே எந்தன் கண்ணே — உ

பார்வதி தரு

வாணாசூரனுக்கு வரம் கொடுக்க நாதா இந்த
பாரினில் போகவொண்ணாதே வேதா
அசுரர் மாய்கையில் நாதா
அகப்படக்கூடாதே போதா

பரமசிவன் தரு

மாய்கையான சூரனால் என்ன மங்கையாள்
போகவேண்டும் சொன்னேன்
இல்லறத்தில் நீயும் சென்று பெண்ணே
இருந்திடுவாய் நானும் போறேன் கண்ணே

பார்வதி கந்தார்த்தம்

என்னிட பிராணநாதா இயம்புவேன் ஒன்று கேளும்
தன்னந்தனியாயிந்த தையலை விட்டுச் சென்றால்
என்னமாய் இங்கு இருப்பேன் யேகியே உன் பிறகே
குவலயம் தன்னிலிருக்கும்,

தரு

குந்திபட்டணம் வருவேன் எனதுநாதா
குந்திபட்டணம் வருவேன்

குந்திபட்டணம் தன்னையே கோதையாள் பார்க்கவேண்டும்
எந்தனையழைத்துக்கொண்டு ஏகுவீர் எந்தன் நாதா — கு

பரமசிவன் கந்தார்த்தம்

தோகையேகேளாயிந்த தொல்புவிதன்னிலுள்ள
மாதர்கள்வரவொண்ணுது மங்கையேசொல்வேன்கேளும்
ஆயிரம்சிரசுடைய அரக்கனைக்கண்டுநீயும்,

தரு

அலரிப்புரண்டுநீவிழுவாய் பூமியில்நீயும்
அலரிப்புரண்டுநீவிழுவாய்

சங்கரியாளேநீயும் தையலேவரவொண்ணுது
பாவையர்கள்அலரிவிழுந்தால் பங்கமெனக்காகுமோடி

சுருள் பத்தினியாளே உற்றதைச்சொன்னேன்
நத்தியஎந்தனை உத்தமிஅனுப்பும்

பார்வதி விருத்தம்

மன்னவாசொல்லைக்கேளாய் மங்கையாள்நானுமிப்போ
என்னநீர்சொன்னபோதும் ஏந்திழையாளும்கூட
கன்னியாள்வருவேனையா கர்த்தனே தடுக்கவேண்டாம்
உன்னிதபிராணநாதா உம்மோடுவருவேனையா.

வசனம்

ஆனல்கேளும் பிராணநாதா! நீர் என்னசொன்னபோதிலும் நான் தன்னம்தனியாய் இங்ஙனம் இருக்கமாட்டேன் உம்மோடு கூட வருகின்றேன் பிராணநாதா.

பரமசிவன் தரு

போவோம்வாரீர் இருவருமாய்போவோம்வாரீர்
போவோம்இருவருமாய் பொற்கொடியேநாமும்
பாணுசூரன்மகிழ பைங்கொடியாளேநாமும் போ

பொதுவசனம்

இவ்விதமாக பரமசிவனும் பார்வதியும் ரிஷபவாகனரூடராய் செல்லுகின்றபோது திரிலோக சஞ்சாரியாகிய நாரதர் பரமனை காண்க வருகிறவிதங்காண்க.

நாரதர் வருகிற விருத்தம்

கன்னியர்கள்தனைவெறுத்து காவிகாம்பரமணிந்து
உன்னிதமாகவேதான் ஒய்யாரநடைநடந்து
பாரினில்வாணுசூரனை பங்கமேபடுத்திவைக்க
நானிலம்புகழும்தெய்வ நாரதர்வருகின்றாரே.

நாரதர் வருகிற தரு

உலகமெங்கும்புகழ்படைத்து உயர்ஞானம்தனையறிந்த
ஒய்யாரநாரதர்வந்தேன் இந்தவுலகத்தை
ஒருநொடிதனில் சுற்றிடும் ஒய்

பூமிபாரம்தீர்க்ககிஷ்டன் பிறக்குமுன்னமேயறிவேன்
பூதலத்தோர்கொண்டாட பூவைதனைவெறுத்தேன்
பொங்கரகமணிந்த பூவைக்கிடபாகம்தந்த
பொற்புள்ளயீசன்போகும் சேதிஅறிவோமென்று ஒய்

நாரதர் கவி

அப்பணிபரனேபோற்றி அய்யனேஉன்னிருதாள்
செப்பியேநாரதன்தான் திருவடிக்கடியேன்போற்றி
கார்வண்ணன்மைத்துனனான கர்த்தனேஅடியேன்போற்றி
ஆவலாய்எந்தனைநீர் அன்புடன்ஆள்வாய்போற்றி.

வசனம்

அரகரா சம்போ சிவசங்கரா அடியேன் நாரதன் அநேக வந்தனம் வந்தனம் சுவாமி.

பரமசிவன் வசனம்

ஆனால் வாருமப்பா நாரதா! நீர் என்றைக்கும் சுகமாக கல்லும் காவேரிமட்டும் புல்லும்பூமி யுள்ளளவும் வாழக்கடவது. நீர் என்னிடம் நாடிவந்த காரணம் என்ன சொல்லும் நாரதா.

நாரதர் தரு

வந்தசேதிசொல்லுகிறேன் வள்ளலேநீர்கேளும்
வன்மையுடன்எங்கேபோரீர் மங்களமாய்கூறும்

இருவரும்ஒருமனதாய் எந்தனுக்குஉரைசெய்வீர்
சுருள் ஏக்கமுமாகுதே இந்தசொல்லைநினைக்க
பார்க்கவும்தேவர்கள் பழிக்கவுமாச்சுதே வ

பரமசிவன் தரு

கேட்டவர்க்குவரமளிக்கும் கீர்த்திப்பிரதாபனுச்சே
நீர்கெடுக்கவந்தசேதி நினையாதேஒருபோதும்

வரங்கொடுக்கும்ஈசனென்று வையகத்தில்சொல்வார்களே
வர்ம்மமாகஎந்தனிடம் வாதுஒன்றும்பேசவேண்டாம்

சுருள் பூங்கவன்மைந்தனே புளுகநீவந்தையா
வேகாதுஉன்பேச்சு வீணனேஅப்புறம்போ கே

நாரதர் தரு

போகவேண்டாம்ஒன்றுசொல்வேன் தாத்தாவே ஓதாத்தாவே
பின்னால்பொல்லாங்குநேருமையா தாத்தாவே
கலகக்காரனென்றுநீயும் கடினமாகபேசவேண்டாம்
நீபோகும்காரணத்தை பின்னால்சொல்லுவேன்தாத்தாவே

பரமசிவன் தரு

என்னகாரணமிதுநாரதனே அப்பாநாரதனே
எனக்கறியசொல்லவேண்டும் நாரதனே
பின்னால்வரும்காரணத்தைநாரதனே அப்பாநாரதனே
எனக்குமுன்னமேநீசொல்லிடுவாய் நாரதனே

நாரதர் தரு

பரமனென்றுபேர்படைத்த தாத்தாவே ஓ தாத்தாவே
பத்மாசூரனாலேபங்கபட்டீர் தாத்தாவே
அந்தகாரணம்போல தாத்தாவே இந்த
அவனியில்துன்பப்படபோரீர் தாத்தாவே

பரமசிவன் தரு

என்னநீசொன்னபோதும் நாரதனேஅப்பாநாரதனே
இனிஉன்சொல்லைநம்பமாட்டேன் நாரதனே
அடியவர்க்கருள்தரநாரதனே அடாநாரதனே
அன்புடனேசெல்லவேண்டும் நாரதனே

நாரதர் கவி

தாத்தாவேசொல்லக்கேளாய் தாரணியில்ராட்சதனாலே
துன்பமேபடவேபோறாய் தொல்புவிதனிலேநீரும்
சொன்னதைகேளாமல்தான் தோகையும்நீருமாக
அசுரனால்உங்களுக்கு அவிதிகள்வந்துநேரும்.

வசனம்

கேளும்தாத்தாவே நான் சொல்லுவதை தடுத்து செல்லுகின்றீர் முன்னால் ராவணேஸ்வரனுக்கு மூன்றரைகோடி ஆயுசுவாங்கிக் கொடுத்தீர் உனதுமைத்துனனால் அரைக்கோடி ஆயுசாகதீர்த்தார் அப்படிஇருக்க பத்மாசூரனுக்கு வரத்தைக்கொடுத்து அவன் உன் சிரசினில் கையைவைப்பேன் என்று துரத்திக்கொண்டு ஓடிவர நீர் ஐவேலங்காயில் போய் ஒளித்துக்கொண்டீர் அதுவும் மகாவிஷ்னுவினால்தான் அப்போது உயிர்பெற்றீர் அதுவும் அப்படி இருக்க இப்போது போவது சரியல்ல அப்படி போனதேயாமானால் துன்பம்வந்து நேரும்தாத்தா.

பரமசிவன் தரு

பாணாசூரன் தவத்தைநாடியே பரமசிவன்
பட்சமுடன் ஓடிவாருரே
அன்பருக்குஅன்பனானவர் கைலாசவாசர்
ஆதிசிவன்ஓடிவாருரே தவத்தைநாடி
ஆதிசிவன் ஓடிவாருரே
தவநிலை தன்னைக்கண்டார் தற்பரனார்ஆதிசிவன்
அரகராவென்றசத்தம் ஆதிசிவன்காதில்கேட்டு
இன்பமுடன்ஓடிவாருரே பரமசிவன்
இன்பமுடன் ஓடிவாருரே
உன்னுடையதவநிலையை உத்தமனேமெச்சிக்கொண்டேன்
என்னவரம்வேண்டும்நீ சொல்வாய்பாணாசூரனே
அப்பா பாணாசூரனே

வசனம்

கேளுமப்பா பாணாசூரனே உன்னுடையதவநிலை மெச்சிக்கொண்டேன் வேண்டிய வரத்தை நீர்கேளும் பாணாசூரனே.

தேவாரம்

உலகெல்லாம் ஓதுதற்கரியவன்
நில்வுலாவிய நிமலிவேணியன்
அலகில்பொன்னம் பலத்திலாடுவோன்
மலர்சிலம்படி வாழ்த்திவணங்குவேன்.

பாணாசூரன் தரு

அரகராவென்றபோது ஆதரிக்கவந்தஎந்தன்
ஐயனேஉன்பாதமலர் போற்றிசெய்தேன்
ஈரேழுஉலகத்தையும் இன்பமுடன்ஆளவேண்டும்
எனக்குநீர்அந்தவரம் தாருமையா

பரமசிவன் தரு

நீர்கேட்டவரமெல்லாம்தந்தோம் கீர்த்தியுடனே
கெம்பீரமாகநீயும் வாழ்ந்திடுவாய்அப்பா
கெடிபெற்றுநீயுமே இருந்திடுவாய்

வசனம்

ஆனால்கேளும் அசுரனே! இந்த ஈரேழுலோகத்தையும் ஆள வேண்டுமென்று கேட்டபடியினால் அப்படி தந்தேன் நீர் பெற்றுக் கொண்டு உன்னுடைய குந்திபட்டணம் சென்று சுகமாக வாழ்ந் திருப்பாய் சூரனே நான்சென்று வருகிறேன்.

பாணசூரன் தரு முடுக்கு

எங்கேநீசெல்லுகிறாஈஸ்வரா ஓ ஓ ஈஸ்வரா
இங்கேகாவலிருக்கவேண்டும் ஈஸ்வரா ஓஈஸ்வரா
குந்திபட்டணத்தில் கோதையேசாணம்
தெளிக்கவேண்டும் சொன்னன்போ சொன்னேனே
பரமனேகோட்டைக்குள் பாராயிருக்கவேண்டும்
பண்புடனேவேலை பாவையவள்செய்ய
பக்திபுரிந்துமே பண்புடனேவருவீர்

பரமசிவன் புலம்பல் தரு

ஐயையோநான் என்னசெய்வேன்
அரிவைசொல் மீறிவந்து
அவமானம்அடையலானேன் பெண்மயிலே
நாரதர்சொன்னசொல்லை நான்தடுத்துவந்ததினால்
நங்கையேநமக்குபங்கம் இங்ஙனம்வந்துதையோ
சுருள் நாட்டினில்எந்தனை நகைக்கவுமாச்சுதே
மேட்டிமையாக மெல்லியேஎன்செய்வோம்

பார்வதி தரு

காலனையுதைத்தபாதா கங்கையைதரித்தநாதா
பாவையாள்நான் சொன்னசொல்லை
பரமரேநீர் தடுத்துவந்தீர்
பாவியந்தசூரனுக்கு காவல்புரியகாலமாச்சே
பாவையாள்சாணம்போட பரமரேஉனக்கழகா
சுருள் பத்தியாகவே உத்தமிசொன்னேனே
கர்த்தனேகேளாமல் மெத்தவருந்துரீர்

பரமசிவன் கவி

என்னநான்செய்வேன்பெண்ணே என்னிடதலைவிதியால்
கோரிதவத்துக்கிரங்கி கொடுமைகள்வந்துதையோ
பாரினில்பாணசூரன் என்னைபங்கமேபடுத்திவிட்டான்
யினியென்னசெய்யப்போறோம் ஈஸ்பரியாளேநாமும்.

வசனம்

ஆனால்கேளும் பெண்ணே! பார்வதா முதல்கோணலானல் முற்றும் கோணலாகுமென்ற பழமொழி தெரிந்திருந்தும் நீர் சொன்ன சொல்லையும் தடுத்துவந்து வழியில் நாரதன்சொன்ன சொல்லையும் தடுத்துவந்து நமக்கு இப்பேர்ப்பட்ட கெதி நேர்ந்துதே என்னசெய்வோம் பெண்ணே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இவ்விதமாக வரங்கொடுக்கவந்த பரமசிவனையும் பார்வதியையும் காவல்புரியும்படி பாணசுரன் கட்டளையிட பரமசிவனும் பார்வதியும் புலம்பிக்கொண்டிருக்க பாணசுரன் மகளாகிய உஷா வருகிறவிதங் காண்க.

உஷா வருகிற கவி

பந்தமாய்பணிகளர்ட பாவையர்அருகில்சூழ
சுந்திரமாகவேதான் தோகையாளலங்கரித்து
கந்தகளபங்கள்பூசி கஸ்தூரிவாடைவீச
உன்னிதமாகவேதான் உஷாயிதோவருகின்றாளே.

தரு

அன்னநடைநடந்து அருகில்தாதியர்சூழ
உன்னிதமாகவேதான் உஷாயிதோவாரேன்

அழகில்மிகுந்தரூபி ஆரமணிமாலையாட
பெருமையில்மிகுந்தவஞ்சி பேதையும்வாரேன்

பரமன்பாதம்தினந்துதிக்கும் பைங்கொடியிவளோவென
ஒருமையுடன்தாதியோடு உத்தமிவாரேன்

தேவனூர்நகர்வாழும் விஷ்ணுகுலத்துங்கனும்
கோரும்ராமசாமிபாடல் கோரும்அங்கனும் அ

உஷா விருத்தம்

என்னிடதோழியான எழிலானசேடிகேளாய்
பன்னரும்பரமன்பாதம் பண்புடன்பணிந்துக்கொண்டோம்
உன்னிதமானதாதி ஓடியேநீங்கள்சென்று
சித்திரரேக்காதன்னை சீக்கிரம்அழைத்துவாடி.

வசனம்

ஆனால் வாரும் தாதிமார்களே! நாம் பரமனை பணிந்துக் கொண்டபடியால் நாம் நந்தவனம் சென்று விளையாடவேண்டும். அதற்காக சித்திரரேக்காவை அதிசீக்கிரம் அழைத்து வாருங்கள்.

வசனம்

சித்திரரேக்காவை அழைக்க சித்திரரேக்கா தர்பார் நாடி வருகிறவிதங்காண்க.

சித்திரரேக்கா வருகிற கவி

சேடியருரைத்தபோது சிங்காரபட்டுடுத்தி
ஆவலாயழைத்தசேதி அரிவையுமறிவோமென்று
கங்கணவளையல்மின்ன கந்தமும்புனுகுவீச
சேயிழையானமாது சித்திரரேக்காவருகின்றாளே.

தரு

மின்னல்கொடியோவென்ன மேனிபளபளென்ன
சின்னவயதாமென்ன சித்திரரேக்காவந்தேன்

கொடிபோல்யிடைதுவள கொங்கைமீதில்மாலையாட
படிதனில்கீர்த்திபெற்ற பாவையும்வாரேன்

சந்திரன்போல்முகமுடையாள் சாந்துசவ்வாதுபூசி
விந்தையாய்விளையாட எண்ணிவித்தகிவாரேன்

பத்தரைமாத்தோவென்ன பசும்பொன்மேனியான
ராமசாமிபாடல்பாடி பைங்கொடிவந்தேன்

சரண தரு

வந்தனமுன்பாதமே வண்மையுடன்காருமே
எந்தனைநீர்இங்ஙனம் எனழைத்தீர்சொல்லுமே
பந்தமுடன்பாவையாளும் பாதம்தனில்பணிந்திட்டேன் வ

வசனம்

அம்மணி தாதியாகிய சித்திரலேக்கா அநேக வந்தனம் புரிந்திருக்கின்றேன்.

உஷா தரு

எந்தன்பாதம்பணிந்ததினால் இன்பமுடன்வாழ்ந்திருப்பாய்
பந்தமுடனீருமேதான் பாக்கியம்பெருகிவாழ்வாய்
நந்தவனம்தன்னில்சென்று நங்கையேவிளையாடுவோம்

வசனம்

வாரும்சித்திரலேக்கா நாம் நமது நந்தவனம் நாடி சற்றுநேரம் விளையாடவேண்டும் என்று அழைத்தேன் நீர் என்றைக்கும் சுகமாய் இருப்பாய் எழுந்திரும் தாதி.

வசனம்

அப்படியே நந்தவனம்போவோம் வாருமம்மாதாயே.

இருவருக்கும் கும்மி

வாரும்வாரும்சகிமார்களே விளையாடுவோம்நீங்கள்
மாடபுறுகொண்டலாத்தி குருவிகள்மயில்குயில்கள்
வாழும்வனந்தனிலேஓடதடாக மிருக்குதுபட்சிகள்
ஓடிவிளையாடி வேடிக்கைபார்க்கலாம்
வாரும்வாரும்சகிமார்களே

பொது வசனம்

உஷா சித்திரலேக்கா இன்னம் சிலதாதிகளும் நந்தவனத்தில் விளையாடி இருக்க அந்த சமயத்தில் திரிலோக சஞ்சாரியாகிய நாரதர் நந்தவனமார்க்கமாக வருகிறவிதங் காண்க.

நாரதர் தரு

நந்தவனம்தன்னைநாடியே நாரதமுனி
நன்மையுடன்ஓடிவாராரே நாரதமுனி

அனுருத்திரன்அழகைசொல்லவே உஷாதனக்கு
அதிதுருசாஓடிவாறுரே நாரதமுனி

மங்கையர்கள்தன்னைக்கண்டாரே நாரதமுனி
மனமகிழ்ச்சிக்கொண்டுநின்றாரே நாரதமுனி

மங்களகாரியம்தன்னைக்கொண்டுமே நாரதமுனி
மகிழ்உடனேநடந்துவாராரே நாரதமுனி
பாணசூரன்மகன்உஷாதன்னையே நாரதமுனி
பாணிக்கிரகம்செய்யஎண்ணியே நாரதமுனி
பக்ஷமுடன்ஓடிவாருரே தந்தானதனை

போது வசனம்

நாரதரானவர் குந்திபட்டணத்திலிருக்கும் நந்தவனத்தை நாடிவந்தபோது உஷாவும் தாதியும் நாரதரைக்கண்டு வணங்குகிற விதங்காண்க.

உஷா தரு

எந்தஊர்பெரியவரோசொல்லும் ஐயாசொல்லும்
நீஇங்குவந்தகாரணமென்ன சொல்லும்அறியவிள்ளும்
தபத்தில்சிறந்தவரே தபயோகிபோல்வந்தவரே
தையல்இருவரும் தன்மையுடன்பணிந்திட்டோம்

நாரதர் தரு

எந்தஊர்என்றுஎன்னை கேழ்க்குறீர்அம்மாகேழ்க்குறீர்
எளிதமாகஎன்னைபார்க்குறீர் தாயேபார்க்குறீர்
பந்தபாசமுடனே பாவையேநீங்களார்
எந்தனுக்குவிபரமாக எடுத்திங்குஉரைசெய்வீர்

உஷா தரு

குந்திபட்டணமாளும் சூரன்வாணசூரன்
அவர்மகள்உஷா யென்றபேராகும்
சொன்னேன்யானும் சொன்னேன்
சிங்காரதாதியவள் சித்திரளேக்காவும்நானும்
நந்தவனம்தனிலே நங்கையாளிருக்கின்ருேம்

வசனம்

தபயோகியே வாணசுரன்மகளாகிய என்பேரோ.உஷா இவள் என் தாதியாகிய சித்திரளேக்கா இதுதான் எங்கள் நாமகரணம் தங்களுடைய நாமகரணம் சொல்லும் தவத்தோரே.

நாரதர் தரு

ஆகாஇதுநல்லவார்த்தையே நல்லவார்த்தையே
அரிவையேமணமது ஆச்சுதாஅம்மாஆச்சுதா
பரிவானஉலகத்தில் பாவையரேநீரும்
திருமணமாகாமல் செல்வியிருப்பதென்ன

உஷா தரு

அந்தவார்த்தையுனக்கு யேனோஅய்யாயேனோ
எந்தன் அங்கம்துடிக்கிறது தானேஅய்யாதானே
உந்தன்பேர்யென்னமோ சொல்லும்அய்யாசொல்லும்
உண்மைநீர்சொல்லாவிட்டால் உயிர்சேதம்வருகுமே

நாரதர் கவி

அம்மணிசொல்லக்கேளாய் அடியேன்நான்சொல்லும்வார்த்தை
நன்னயமுடன்என்பேர்தா நாரதனாகும்சொன்னேன்
கன்னியேஉலகம்சுற்றி கண்டேநான்உங்களையிப்போ
கன்னியேமணம்செய்யாத காரணமுரைசெய்வீரே.

வசனம்

ஆனால் கேளுமம்மா உஷா நான்சொல்லாநின்ற வார்த்தையை கவனமாக கேட்டுக்கொண்டுவருவாய் என்பேர் நாரதனாகும் திரிலோகமெங்கும் சுற்றிவருகிறவழியில் உங்களைக்கண்டேன் உனக்கு திருமணமாகாத விபரத்தை சொல்லவேண்டுமம்மா தாயே.

உஷா கவி

தபத்தினில்சிறந்தோனான தவமுனியோரேகேளாய்
அபத்தமாய்என்னைநீரும் அடவினில்வந்துஇங்கே
உபத்திரவம்செய்வதேனோ உனக்கென்னமணமாகாவிட்டால்
ஆபத்துவருகும்சொன்னேன் அய்யனேசென்றிடுவீர்.

வசனம்

திரிலோகசஞ்சாரியாகிய நாரதரே! என்னை நீர் கேவலமாய் நினைக்கவேண்டாம் எனது தந்தை கண்டாரானால் உன்னை அவருடைய கையிலிருக்கும் வாளாயுதத்துக் கிரையாக்குவார் அப்புறம் சென்றிடுவீர் நாரதரே.

நாரதர் வசனம்

அம்மணி உனக்கு நான் நல்லது சொல்வோமென்றால் கெட்டதாக தெரிகின்றாப்போலிருக்கிறது உனக்கு தகுந்த புருஷன் வடமதுரையில் சாம்புவதேவன் மைந்தனான அனிருத்திரனுக்கும் உன் அழகுக்கும்தான் தகுமேயொழிய வேறயாருக்கும் அடுக்காதம்மா தாயே.

உஷா தரு

அய்யாபெரியோரேவாரும் இங்கேவாரும்
அந்தவார்த்தைதன்னை எந்தனுக்குகூறும்

சிந்தைமகிழ்வுடன் சிம்மாதனம்நானளித்தேன்
விந்தையாஎந்தனுக்கு விபரத்தைஉரைசெய்வீர் அ

நாரதர் தரு

இங்கேயேநிற்கச்சொன்ஞய் அம்மாமுன்னமே
தீம்புவருமென்றுசொன்ஞய்

அந்தசூரன்கண்டால் ஆக்கினைசெய்திடுவான்
எந்தனைதடுக்காதே ஏகிநான்வருகின்றேன் இ

உஷா தரு

அந்தமன்னவன்யாரோசொல்லும் அய்யாசொல்லும்
அழகில்மிகுந்தவரோவிள்ளும் நன்ருய்சொல்லும்
வடமதுரையென்றபோதேஅய்யா ஓஅய்யா
அவர்வடிவில்மிகுந்தவரோமெய்யா ஓஅய்யா

நாரதர் தரு

அனுருத்திரன்அழகைசொல்ல அவனியில்யாருமில்லை
அவரேஉனக்கேதகும்அம்மணி யானும்சொன்னேன்
அவர்கைஅழகும்காலழகும் கன்னியரேகண்டாயானுல்
கலங்கிமனமுருகிடுவாய் கட்டழகியானும்சொன்னேன்

வசனம்

ஆனுல் வாருமம்மா உஷா நான் அவர் வடிவங்களை சொல்லிக் கொண்டு வருகின்றேன் கேளுமம்மா.

நாரதர் தரு

ஈரேழுலோகத்திலும் இணையில்லாஅழகுபடைத்த
ஈஸ்வரன்ஈடாமோதான் எந்தனம்மணி
கயிலாசவாசனைப்போல்கண்டேன் அவர்வடிவை
கன்னியேஅவர்உனக்காகும் கண்டுவந்துயானும்சொன்னேன்
சந்தோஷமாகசென்று தையலரேநீயும்
தர்ப்பரர்தன்னையேமணம் தயவுடன்செய்துக்கொள்வாய்
அரன்பாதம்தன்னைக்கோரி அம்மணிநான்சென்றுவாரேன்
தயவுஇருக்கவேண்டும் தையலரேசொன்னேன்

வசனம்

கேளும் உஷா வடமதுராபுரிபட்டணத்தை யாளாநின்ற மகா விஷ்ணுவின் பேரஞன அனுருத்திரன் அழகை சொல்ல ஆயிரம் பணமுடி படைத்த ஆதிசேஷனுலும் சொல்லமுடியாத அழகு வாய்ந்த புருஷன் உனக்கே தகும். எந்தவிதமாவது உனது தாதியாகிய சித்திரளேக்காவைவிட்டு அவன் நித்திரை செய்யும்போது

கட்டிலோடு தூக்கிக்கொண்டுவந்து திருமணம் செய்துக்கொள்ளு மம்மா உஷா.

உஷா கவி

என்னடிசித்திரலேக்கா ஏக்கமுமாகுதோடி
மன்னனைநினைந்தபோது மங்கையென்திரேகமெல்லாம்
ஆயாசமாகுதோடி. அன்னமேஎன்னசெய்வேன்
மங்கையேநீரும்சென்று மன்னனைஎடுத்துவாரீர்.

வசனம்

கேளும் தாதியாகிய சித்திரலேக்கா நாரதர் சொன்னவார்த்தையைக் கேட்டு மனமானது தவிக்கின்றது அன்னவருடைய அழகைப்பார்க்க அதிக ஆசையுள்ளவளாய் இருக்கின்றேன் நீர் அதிக சீக்கிரமாக சென்று அந்த மன்னனை எடுத்துவரவேண்டும் அடியே அப்படி எடுத்துவராவிடில் உன்னை ஆக்கினை செய்துவிடுவேன் அதிகசீக்கிரம் சென்றுவருவாய்.

பொது வசனம்

உஷா சொன்ன வார்த்தையை சித்திரலேக்கா கேட்டுக் கொண்டு வடமதுரை செல்லுகின்ற விதங்காண்க.

சித்திரலேக்கா தரு

சிவனேசிவனேயென்று சித்திரலேக்காவும்
தானடந்தாள்வட மதுரைதேடி
இப்போமங்கையாள் யானுமேதானடந்தேன்
கொஞ்சுங்கிளிமொழியாள் அந்தகோதையாள்
சொன்னதொரு வார்த்தையைக்கேட்டு
மன்னனைக்கொண்டுவராவிடில் மங்கையாள்
எந்தனை ஆக்கினைசெய்திடுவாள்

பொது வசனம்

அகோதேப்படி யென்றால் உஷாசொன்ன வார்த்தையைக் கேட்டு தாதியாகிய சித்திரலேக்கா வடமதுரைதேடி செல்லுகின்றபோது அந்தவனத்தில் வாசம்செய்யும் வேடுவன் வருகின்றவிதங்காண்க.

வேடுவன் வருகிற கவி

வனத்தினில்வசித்திருக்கும் வண்மையுள்ளவேடுவன்தானும்
கையினில்அம்பும்வில்லும் கனத்ததோர்ஆயுதங்கொண்டு
பாசமாய்எவருமெச்ச பண்புடன்வனத்தைநாடி
வேகமதாகவேதான் வேடுவன்வருகின்றேனே.

வேடுவன் தரு

வனத்தில்குடியாக வண்மையுடன்வசித்திருக்கும்
வாகுள்ளவேடுவன்வந்தேன் வெகுவல்லமைசாலி

பட்சிபறவைமுதல் பண்புடனேபொசிக்கின்ற
பாங்குள்ளவேடுவன்நானே வெகுவேடிக்கையாக
பாங்குள்ளவேடுவன்நானே

கண்டோர்அதிசயிக்க காலனிவனேஎன்ன
கரடிபுலிகள்சிங்கம் கதறிநடுங்கிடுமே

கனவேட்டையாடவென்று கையில்வில்லம்புகொண்டு
கானகத்தைநாடிவாரேனே வேடுவன்தானும்
கானகத்தைநாடிவாரேனே

வேடுவன் கவி

இந்ததோர்வனத்தில்சென்று ஏகியேவேட்டையாட
ஆவலாய்வனத்தைநாடி அதிதுருசாகவேதான்
மான்வேட்டையாடவென்று மகிகூஷியாகவேதான்
பாரினில்வனத்தைநாடி பண்புடன்வருகின்றேனே.

வேடுவன் தரு வேட்டையாடல்

வேட்டையாடவேநடந்தான் வேடுவன்தானும்
வேட்டைகளாடவென்று வேகத்துடன்சென்று
காட்டிலுள்ளமிருகங்களை கண்டிப்பேனென்றுமே

(முடுக்கு)

கரடிபுலிகள்யெகிறிஓடுதே கலைமான்களும்
வளையைதாண்டி ஓடுதே வே

சித்திரளேக்கா தரு

இந்தவனம்தனிலே எப்படிநான்செல்வேன்
ஈசா ஜெகதீசா
காட்டில்நுழையும்போது கைகால்நடுக்குதே
ஈசா ஜெகதீசா
எமனைப்போல்ஒரு மனிதன்வருகின்ருன்
ஈசா ஜெகதீசா
உஷாசொன்னசொல்லை உண்மையாய்நம்பிவந்தேன்
ஈசா ஜெகதீசா
திரும்பிவீடுபோவோமென்றுல் எனக்குதீம்புவருகுமையோ
ஈசா ஜெகதீசா

வேடன் சீசபத்தியம்

இதுஎன்னபுதுமையோ யேக்கமுமாகுதே
இந்தவனதேவதையோ யானறியேன்
பாவையர்என்றெண்ணி பட்சமாயிருந்தேனே
பைங்கொடிதன்னைப்பார்க்க மனமுருகுதையோ

வசனம்

ஆகா இன்று நாம் வேட்டைக்கு வந்த யிடத்தில் நமக்கு கிடைத்ததே பாக்கியம். இந்த பெண்ணை சேராவிடில் இந்த ஜெனனத்தை ஏன் வைத்திருக்கவேண்டும் அருகில் சென்று பார்ப்போம்.

வேடன் தரு

கட்டழகியேநீரும் கானகத்தில்வந்தவிதம்
கருத்தைநீயுரைசெய்வாய் கண்மணியே
தன்னந்தனியாயிந்த தார்வனம்தன்னைநாடி
தையலேவந்ததேனோ பெண்மணியே

சித்திரளேக்கா தரு

கண்மணியென்றுஎன்னை கண்டபடிபேசாதடா
உன்னைக்கட்டினபெண்டாட்டியே நான்போடாமூடனே
கண்ணேபெண்ணேஎன்றுஎன்னை கபடமாகபேசவேண்டாம்
கருத்தழியாதவளாச்சே போடாபேயனே

வேடுவன் தரு

விட்டுவிடுவேனென்று வீண்வாதம்பேசவேண்டாம்
வில்வித்தைகற்றவேடுவண்டி பெண்மயிலே
தட்டுதட்டாகொட்டிகிழங்கு தையலேதருவனடி
மட்டிதனமாகநீயும் மங்கையரேபேசவேண்டாம்

சித்திரலேக்கா தரு

விடமாட்டேனென்றுநீரும் வீண்வாதம்பேசவேண்டாம்
வீணஅழிந்துபோவாய் வேடுவனே
உத்தமிநானுச்சுதே என்சொல்பலிக்குமோடா
ஓடிநீபிழைத்திடுவாய் வேடுவனே

வேடுவன் கந்தார்த்தம்

இந்ததோர்கானகத்தில் எவ்வளவோநாளதாக
ஏந்திழையாள்ஒருவரையும் இவ்வனத்தினில்கண்டதில்லை
பந்தமுடன்பாவையாளை பார்த்ததேமனமாகுதையோ
பைங்கொடியாளைநானும் பதட்டமாயிழுப்பேன்பாராய்,

தரு

பாவையேஇழுப்பேன்பாரடி உந்தனைஇப்போ
பாவையேஇழுப்பேன்பாரடி

பாவையேஉன்னைஇப்போ பாரினில்சேராவிட்டால்
என்ஆவியும்போகுதடி அரிவையரேபெண்ணே பா

சித்திரலேக்கா கந்தார்த்தம்

தொட்டுமேஇழுப்பேனென்று துடர்ந்துமேவந்தபாவி
பாதகசண்டாளாநீரும் பரலோகமடையப்போறாய்
எந்தனுவியும்துடிக்குதையோ அரகராஇவனைநீரும்
பாரினில்சாம்பலாக,

தரு

பத்தியெரியக்கண்பாருமே சம்போசங்கரா
பத்தியெரியக்கண்பாருமே
பத்தியாகவேஇந்த பாதகன்தன்னையேநீர்
நெற்றிக்கண்ணால்இவனை நிமிஷத்தில்எரித்திடுவாய் ப

பொது வசனம்

அகோகேளும் அண்ணு! என்னை துராங்காரமாக என்னை சேர சொல்லுவது தர்மமல்ல இன்னும் முன்னோர்கள் சொல்லிஇருக்கும் தர்மசாஸ்திரபிரகாரம் ராஜகன்னிகை குருபத்தினி ஏழை ஸ்திரீ தூரஸ்திரீ விதவை இந்தபஞ்சகன்னிகைகளை சேரக்கூடாதென்று தர்மசாஸ்திரத்தில் சொல்லி இருக்கிறது ஆகையால் நீ வருந்துவது தர்மமல்ல சென்றுவருவீர்.

அனுருத்திரன் வருகிற கவி

கண்டவர்யெவரும்மெச்ச காமசுந்திரனோவென்ன
வடிவினில்இவனோவென்ன வாகுவல்லையமின்ன

படிமிசைகீர்த்திபெற்ற பாலன்மன்மதனோவென்ன
ஆயர்கள்குலத்தோனான அனுருத்திரன்வருகின்றேனே.

அனுருத்திரன் தரு

ஆயர்குலம்தன்னில்வந்த   அரிகிருஷ்ணன்பேரனான
அனுருத்திரன் கொலுவதாகினார்
அஞ்சஅஞ்சலாய்   வஞ்சியர்சூழ
அனுருத்திரன் கொலுவதாகினார்
பார்த்துஎவரும்மெச்ச   பாலமன்மதனென்ன
பாவையர்மனமகிழவே   அனுருத்திரன்தானும்
கண்டுஎவரும்மெச்ச   கரியமால்பேரனான
கட்டழகன்கொலுவதாகினார்   அனுருத்திரன்தானும்
அலைகடலில்பள்ளிக்கொண்ட   ஆதிமாயன்பேரனான
அனுருத்திரன்கொலுவதாகினார்
அரிவையர்இருபுறம்   கவரிகள்வீசிட
அனுருத்திரன் கொலுவதாகினார்

அனுருத்திரன் கவி

அருகினில்இருக்கும்எந்தன் அன்புள்ளதோழரேகேளீர்
வடமதுரைதனில்நாமும் வன்மையுடன்நாமெல்லோரும்
பரிவுடன்கூடிநாமும் பந்துகளடிக்கவேண்டும்
ஒருமிக்ககூடிநீங்கள் ஓடியேவருகுவீரே.

வசனம்

வாருங்கள் தோழமார்களே நமது வடமதுராபுரி பட்டணத்தி லுள்ள நந்தவனம் சென்று நாம் ஒருமிக்ககூடி பந்தடிப்போம் வாரும் தோழமார்களே.

அனுருத்திரன் தரு

பந்தடிப்போம்வாரீர் தோழமார்களே
பந்தடிப்போம்வாரீர்
பந்துதனைஎடுத்து அந்தரத்திலெறிந்தோம்
பந்தயம்நான் தருவேன் பார்த்துஎடுத்துவாரும் ப

பொது வசனம்

அகோதெப்படியென்றால் அனுருத்திரனானவன் தோழமார்களுடன் விளையாடி இருக்க அந்த சமயத்தில் நாரதரானவர் உஷாவினுடைய அழகை அனுருத்திரனுக்கு சொல்லி எந்த விதமாவது விவாகத்தை முடித்துவைப்போமென்று நாரதர் வருகின்றபோது அனுருத்திரன் நாரதரைக்கண்டு ஏதென்று சொல்லுகின்ற விதங் காண்க.

அனுருத்திரன் சரண தரு

அண்ணாசரணம் அனுருத்திரன்பணிந்தேன் தருணம்
வடமதுரைதேடிநீ வந்தவிதமுமென்ன
எந்தனுக்குஅறியவே இன்பமுடனுரைப்பீர்
கலங்கமில்லாமனமுடைய கர்த்தனே அருள்செய்வீர்

வசனம்

சரணம் சரணம் அண்ணாவே அடியேன் நமஸ்கரிக்கின்றேன் ஆசீர்வதிப்பீர்.

அனுருத்திரன் தரு

கலங்கமில்லாமனமுடைய கர்த்தனருளால்வந்த
எந்தன் கண்ணீர்க்கு நேர்மையானஎந்தனண்ணா
இந்தவையகத்தைசுற்றிவரும் [illegible]ண்மையுள்ள என் தமையா
நீவடமதுரைவந்தசேதி [illegible]க்கவே[illegible]ம்அண்ணா

நாரதர் தரு

76991

வடமதுரைவந்தசேதி வல்லவனே தம்பி கேளும்
வர்மமில்லாசொல்லுகின்றேன் வடிவழகாவந்தசேதி
படிமிசையில்கீர்த்திவாய்ந்த பைங்கொடியாள் ஒன்று[illegible]டேன்
அவளழகைசொல்லும்படி அன்புடனேஓடிவந்தேன்

அனுருத்திரன் தரு

பைங்கொடியாள்என்றபோதே [illegible]பதறுதேஎந்தன்மனம்
பாவையரைஎங்குகண்டாய் பட்சமுடன்எனக்குசொல்லும்
வடிவில்மிகுந்தவளோ வர்மமில்லாஎனக்குரையும்
வம்புவழக்கில்லாமலே மாதுதன்னைசொல்லுமையா

0-1892MRS,U

நாரதர் தரு

தம்பிநீஎந்தன்சொல்லை நம்பிநீநடந்தாயானால்
தாழ்வுஒன்றும்வாராதப்பா தம்பிஎந்தன்சொல்லைநம்பு
குந்திபட்டணமாளும் கோவந்தன்வாணசூரன்
கோரும்தவத்தால்பிறந்த கோதையவளே

அனுருத்திரன் தரு

பாட்டனுக்குப்பகையாளியான வாணசூரன்மகள்தன்னை
இந்தபாரினில்கொள்ளலாமோ எந்தனண்ணா
எதிர்த்தவிரோதமாகும் எந்தனைதாத்தாகொன்றிடுவார்
எனக்குயேன்அந்தபெண்ணு எந்தனண்ணா

நாரதர் கவி

அனுருத்திராசொல்லக்கேளாய் அவனியில்சூரரைஎல்லாம்
அதம்செய்யநமதுகுலம் ஆட்சியாய்இருக்கும்போது
அரிவையைமணமும்செய்ய ஆயாசப்படவேவேண்டாம்
அவள்பெருமையைஎன்னசொல்வேன் பதராதேஎனதுதம்பி.

நாரதர் வசனம்

கேளும் அனுருத்திரனே குந்திபட்டணத்தை யாளாநின்ற வாணசூரன்மகளாகிய உஷா என்பவளை இந்த ஈரேழுலோகத்திலும் இணையில்லா அழகுவாய்ந்த பெண்என்று சொல்லலாம் அவளுடைய அழகுக்கும் உன் அழகுக்கும் தகுமேஒழிய வேறே ஒருவருக்கும் ஆகாதப்பா தம்பி.

அனுருத்திரன் கவி

அண்ணாநீர்சொன்னசொல்லை அன்புடன்கேட்டபோதே
என்னநான்செய்வேனையோ எண்ணமும்வேருகுதே
கன்னியைமணமுடிக்க காரணம்நீரும்சொல்வீர்
என்னநான்செய்வேனையே ஏக்கமுமாகுதையோ.

வசனம்

கேளும்நாரதரே சொன்ன வார்த்தையைக் கேட்டு மனமுருகலாகினேன் அந்த பெண்ணை எந்தவிதமாவது மணமுடித்து வைப்பாய் அண்ணா.

நாரதர் வசனம்

ஆனால்வாரும் அனுருத்திரா நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் அந்த உஷா என்கிற பெண் தானேவந்து மணம்புரிந்துக் கொள்ளுவாள் கொஞ்சம் மனம்பொறுத்திரும் அனுருத்திரா.

சித்திரளேக்கா தரு

வந்தவழியிலொரு வல்லவனை எரித்தேன்
வஞ்சியாள்திகைத்துநான் வாடிகலங்கலானேன்
வடமதுரையைக்கண்டு மனதில்சந்தோஷம்கொண்டேன்
மங்கையால்யினி பயமில்லாமலிருந்தேன்

பொது வசனம்

அகோதெப்படி என்றால் இந்தப் பிரகாரமாக சித்திரளேக்கா வானவள் அனுருத்திரனை எடுக்கவேணுமென்று வடமதுரை நாடி வருகின்றபோது அனுருத்திரனவன் தன்னுடைய நகரத்தில் மஞ்சத்தின் மீதில் நித்திரைசெய்கிற விதங்காண்க.

அனுருத்திரன் கவி

தோழரேசொல்லக்கேளாய் எனக்குஆயாசமாகுதப்பா
பஞ்சணை மீதில்நான்படுத்து நித்திரைசெய்யப்போறேன்
நாழிகைபதினைந்தாச்சு நலமுடன்நீங்களுமே
ஆவலாய்அருகிலிருப்பீர் அன்புள்ளதோழமாரே.

வசனம்

ஆனால்வாரும் தோழமாரே எனக்கு நித்திரைவருகின்றது நான் மஞ்சத்தின் மீதில் நித்திரைசெய்யப் போகின்றேன் நீங்கள் யாவரும் அருகிலிருப்பீர் தோழமாரே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் அனுருத்திரனவன் நித்திரை செய்திருக்கும்போது சித்திரளேக்காவானவள் தோழர் தூங்கு கின்றபோது அனுருத்திரனை கட்டிலோடு தூக்குகின்ற விதங் காண்க.

சித்திரளேக்கா தரு

அதிகநித்திரைசெய்யும்போது அனுருத்திரன்தன்னையான்
அன்புடனெடுப்பேனே மனமகிழ்ந்து
அன்புடனெடுப்பேனே

கன்னக்களவாக காவலர்அறியாமல்
கடுகினானெடுப்பேனே கட்டிலோடு
கடுகினானெடுப்பேனே

கட்டிலோடுஎடுக்க கன்னியாள்மனமகிழ்ந்து
கருத்துடன்எடுத்தேனே அனுருத்திரன்தன்னை
கருத்துடன்எடுத்தேனே

அரண்மனை தனனைவிட்டு அப்புறம்சென்றுவிட்டால்
நமக்குஆயாசம்ஒன்றுமில்லை இடத்தைதாண்டினுல்
நமக்குஆயாசம்ஒன்றுமில்லை

பொது வசனம்

அகோதெப்படியென்றுல் இந்தப் பிரகாரமாக தாதியாகிய சித்திரலேக்காவானவள் அனுருத்திரன் நித்திரைசெய்யும் தருணம் பார்த்து கட்டிலோடு தூக்கிக்கொண்டு வந்து குந்திபட்டணம் நந்த வனத்தில் இறக்கியபொழுது உஷாவானவள் சித்திரலேக்காவைப் பார்த்து ஏதென்று சொல்லுகிற விதங்காண்க.

உஷா கவி

என்னடிசித்திரலேக்கா ஏகிநீவந்தசேதி
மன்னவர்தனைநினைக்க எனக்குமயக்கமுமாகுதடி
கண்ணளர்தன்னைநீரும் கண்ணினில்காட்டாவிட்டால்
உன்னிதமானதாதி உயிரதுபோகும்சொன்னேன்.

வசனம்

எனது தாதியாகிய சித்திரலேக்கா நீ சென்றுவந்த சேதி நல்லதா என்னடி கெட்டதா அதிக சீக்கிரம் சொல்வாய் இல்லா விட்டால் என் உயிர்போய்விடும்போல் இருக்கிறது.

சித்திரலேக்கா வசனம்

ஆனல் கேளுமம்மா உஷா அதோ நமது நந்தவனத்தில் கட்டி லோடு கொண்டுவந்து வைத்திருக்கின்றேன் நீர் சென்று பாரும் அம்மா உஷா.

உஷா சீசபத்தியம்

நங்கையவள்சொன்னசொல்லை நாயகிநான்கேட்டுவந்தேன்
அங்கமும்நொந்துருகி ஆயாசமாகுதம்மா
அடியவர்தனைநினைக்க அதிககாமமீருதம்மா
வடிவினில்மிகுந்தவரை வஞ்சியாள்கண்டபோது

(முடுக்கு)

மயக்கமிகமாகுதடி வஞ்சியரேஎன்னசெய்வேன்
அவர்நித்திரை தன்னைநான் கலைப்போமென்றுல்
நிந்தனைதான்நேருமோ என்னசெய்வேன்
பாலமன்மதன்போல படுத்துநித்திரைசெய்கிறுரே
பைங்கொடிஅவரைநானும் பதட்டமாய்இழுப்பேன்பாராய்

அனுருத்திரன் விருத்தம்

இதுஎன்னகாலமோதான் இங்குநான்வந்ததேனே
வடமதுரைபட்டணத்தில் வண்மையுடன்நித்திரைசெய்தேன்
இங்குவந்தவிதமென்னமோ எனக்குஆயாசமாகுதையோ
இந்தநந்தவனம்தனைப்பார்க்க நடுக்கமுமாகுதையோ.

ஷி வசனம்

ஆஹா! நான் என்னுடைய பட்டணத்தில் இன்றிரவு தோழமார்களுடன் நித்திரைசெய்தேனே இது ஏதோ வேறுபட்டணமாக தெரிகிறது நந்தவனத்தை பார்த்தால் வேறுவிதமாக இருக்கிறது நாம் தன்னந் தனியாய் இங்கு வந்தகாரணமேன் இந்த நந்தவனத்தில் ஆரோ ஒரு பெண் என்னிடத்தில் வார்த்தையாடினாப் போல் இருக்கு. நான்நித்திரைவிட்டு நீங்கிபார்க்கும்போது மறைந்து கொண்டனள் அந்தப்பெண்ணைக்கண்டு நாம் இவ்விடம்வந்தசேதி நேரில்சென்று விசாரிப்போம்.

அனுருத்திரன் தரு

நித்திரைநான்செய்யும்போது நேரிழையேஇங்குவந்து
தூக்கநினைவுகலைத்ததேனே பெண்மணியே
பைங்கொடியேஎன்னைநீரும் பாதிஇரவில்வந்து
நித்திரைபங்கம்செய்ததேனே பெண்மணியே

உஷா தரு

நீயார்எந்தஊரோ திகைதப்பிநந்தவனம்
வந்தவிதம்நீயுரைப்பீர் மன்னவரே
ஆண்மைகள்கொண்டுநீ அடாதவார்த்தைசொன்னாய்
உன்னைஅறிவேன்நந்தவனத்தைவிட்டு அப்புறசெல்வாய்

அனுருத்திரன் தரு

சென்றிடுமென்றுஎன்னை சீக்கிரத்தில்சொல்லவந்தாய்
நான்செய்தபிழைஎன்னமோ நங்கையரே
என்னுடையநகரத்தில் எந்திழையேநித்திரைசெய்தேன்
என்னைகட்டிலோடேதூக்கிவந்தீர் பெண்மயிலே

உஷா தரு

கட்டிலோடேதூக்கினேனென்று கண்டபடிபேசவந்தாய்
இங்கேகளவுசெய்யவந்தாயோநீ மன்னவனே
காரியக்காரர்போல கட்டிலின்மேல்படுத்து
கண்டபடிஉளருகிறாய் மன்னவரே

அனுருத்திரன் தரு

போப்போஎன்றுநீயும் பொற்கோடியேபேசவேண்டாம்
உன்பட்டணத்தின்பேர்என்னமோ பெண்மணியே
ஆருடையமகளோநீ அரிவையரேஎந்தனுக்கு
அன்புடன்மனமகிழ்ந்து கூறும்

உஷா தரு

குந்திபட்டண்ம்ஆளும் கோவேந்தன்வாணசூரன்
அவருக்குகுழந்தையாய் அவதரித்தேன்
என்பேர்உஷாவாகும்

பந்தமுடன்நந்தவனத்தை பார்ப்போமென்றுவந்ததினால்
நீர்படுத்துநித்திரைசெய்வதேனோ மன்னவரே

அனுருத்திரன் கவி

கன்னியேசொல்லக்கேளாய் களவாடிவந்துநீரும்
உன்னிதமுடனேஎன்னை உதாக்ஷண்யமாய்பேசவந்தாய்
மன்னவன்வடமதுரை மகாவிஷ்ணுவின்பேரனாகும்
அன்னமேசொல்லக்கேளாய் அனுருத்திரன்என்பேராகும்.

வசனம்

ஆனால் கேளும் பெண்ணே நான் வடமதுரையில் இன்று ராத்திரி தோழமார்களுடன் நித்திரை செய்துக்கொண்டிருந்தேனே என்னை எந்த விதமாக உன்னுடைய பட்டணம் கொண்டுவந்து விட்டீர்கள் அந்த அசுரர் மாய்கையினால் அல்லவோ எப்படியோ கொண்டுவந்து விட்டீர்கள் இருந்தாலும் இருக்கட்டும் யானே வடமதுரை சாம்புவந்தன் குமாரனை அனுருத்திரன் என்பேர். என்னை இப்போது காந்தர்வமாக விவாகம் செய்துக்கொள்ளும் பெண்ணே.

உஷா தரு

விவாகம்செய்துக்கொள்என்று வீண்வார்த்தைபேசுகின்றாய்
உன்பேச்சுவேகாது போங்காணும்மன்னனே
எந்தன் தந்தையிடத்தில் ஏகிநீகேட்டுவந்தால்
இப்போதேமணம்செய்வார் எடுத்துயானும்உரைத்தேன்

அனுருத்திரன் தரு

தந்தையிடத்தில்செல்ல தையலரேபெண்ணே
இதுதகுந்தநேரமில்லை எந்திழையாளே
குந்தகங்கள்வந்திடாது கோதையரேஇப்பொழுது
எந்தன்கொடுமையை தீர்த்திடும்கோதையரே

உஷா தரு

கொடுமையைத்தீர்த்திடுமென்று குஞ்சிரிப்பாய்பேசுகின்றாய்
இந்தக்குவலயம் நகையாதோமன்னனே
நந்தவனம்தனிலே நங்கையாளும்கூடலாமோ
இதுநலமல்லபோ மன்னனே

அனுருத்திரன் தரு

பொழுதுவிடியாமுன் பொற்கொடியேநாமும்
புணர்ந்துசையோகம் செய்வோம்பூவையரே
விடியற்காலமாகுதடி வெள்ளியுதையமாகுதடி
ராமசாமிசொல்லும்வார்த்தையை பக்ஷமுடன்கேட்பாயோடி

உஷா கந்தார்த்தம்

நாரதன்சொன்ன நாயகன்இவர்தானாகும்
ஆவியும்துடிக்குதையோ அவரழகையான்பார்க்க
பாவிமன்மதன்தானும் பாணத்தைமீட்டுகின்றான்,

தரு

பட்சமுள்ளநாதா பண்புடனேவாரும்
பாவைதன்னைநீருமிப்போ பட்சமுடன்சேரும்
ஆவலுடன்உன்னைக்கண்டு அதிகமையலானேன்
அரிவைதன்னைநீரும்இப்போ அன்புடனேசேரும்

பொது வசனம்

இந்தப்பிரகாரமாக அனுருத்திரனும் உஷாவுமாக நந்தவனத்தில் காந்தர்வவிவாகம் முடித்தபிறகு உஷாவானவள் அனுருத்திரனை இட்டுக்கொண்டு அரண்மனைக்கு போகும்சேதியை திரி

லோகசஞ்சாரியாகிய நாரதர் அறிந்து வாணாசூரனுக்கு தெரிவித்து கலகம்செய்ய வேண்டுமென்று நாரதர் வாணாசூரன் தவத்தைநாடி வருகிறவிதங்காண்க.

நாரதர் தரு

வாணாசூரன் தவத்தைநாடியே	நாரதமுனி
பக்ஷமுடன் ஓடிவாறாரே	நாரதமுனி
கன்னியாளை கலகம்செய்யவே	நாரதமுனி
களிப்புடனே ஓடிவாறாரே	நாரதமுனி
தவநிலை தன்னைக்கண்டாரே	நாரதமுனி
தன்மையுடன் பணிந்துநின்றாரே	தந்தான தான

வாணாசூரன் தரு

தவநிலை தன்னைநாடி	தபயோகியே நீருவந்த
உன் தாள்வணங்கிகரங்குவித்தேன்	தன்மையுடன் என்னைக்காரும்
காவிகாம்பரமுடனே	கனத்தருத்திராட்சம்பூண்ட
கர்த்தனே உன்பாதமலர்	போற்றிசெய்தோம்

வசனம்

சரணம்! சரணம்! திரிலோக சஞ்சாரியாகிய நாரதமுனியே அடியேன் வாணாசூரன் நமஸ்காரம்செய்தேன் தேவரீர் தவத்தை நாடிவந்த சங்கதியென்ன சொல்லும் நாரதமுனிவரே.

நாரதர் தரு

பாரினில்வரத்தைபெற்ற வாணசூரனே
உன்மகள்செய்தபங்கமென்ன சொல்வேனப்பா
பரமனிடம்வரம்பெற்று உன்பாலகியைஎங்கேவிட்டாய்
நமக்குபகையாளிபேரனான பையனோடுபகடையாட
பரலோகத்தோரும்கண்டு பழிக்கவும்காலமாச்சே

வாணசூரன் தரு

என்னவார்த்தைசொன்னாய்நாரதரே ஓ நாரதரே
என்மனம்துடிக்குதையோ நாரதரே
எந்தனுக்குபகையான இடகிஷ்டன்பேரன்தன்னை
இப்பவேகொண்டுபார் எமலோகம்சேர்க்கிறேன்

நாரதர் கவி

உயிர்தனைக்கொல்லவேண்டாம் ஓ ஓ சூராநீகேளும்
அரிகிருஷ்ணன்பேரனான அநுருத்திரன்தன்னைநீரும்
சிறையினிலடைத்தாயானால் சீக்கிரம்வருவார்கிருஷ்ணர்
பார்க்கலாம்கிருஷ்ணன் பகைதன்னைமுடிக்கலாமே.

வசனம்

ஆனால்வாரும் பாணசூரனே! அரிகிருஷ்ணர் பேரனான அநுருத்திரன்தன்னை கொல்லவேண்டாம் நான் ஒரு தந்திரம்சொல்லுகிறேன் கேளும் அந்த சிறுவனைப்பிடித்து சிறையில் அடைத்து வைத்தால் அந்த கிருஷ்ணன் பேரனுக்கு பரிந்து வருவார் அப்போது உமது பகையை முடித்துக்கொள்ளலாம் சூரனே.

வாணசூரன் சிந்து தரு

ஏகினும்பார்ப்போமென்று இருவிழி
  பொரிபறக்கவேகிநடந்தார்

கோட்டைவாசல்தன்னைக்கண்டார் வாணசூரன்
  கொக்கரித்து அதட்டிமீறிகோபங்கொண்டான்

ஆடாபையலேநீ யிங்குவந்தாய்
  அச்சமற்றுகோட்டைக்குள்ளே எப்படிவந்தாய்

கள்ளன்போல்இங்கேவந்தாய் நீயும்
  என்கன்னிகைதனைக்கெடுத்தகாமாட்டிபையா

வாணசூரன் கந்தார்த்தம்

எந்தனிடபகையாளியான இடகிருஷ்ணன்பேராநீயும்
பந்தமாய்இங்கேவந்தாய் பாலகிதனைஎடுக்க
உந்தனையானுமிப்போ ஓங்கியேகையினாலே,

தரு

சிறையிலடித்தேன்பாரடா சிறுவனேஉன்னை
அரிவையென்மகள் தன்னை அனியாயம்செய்யவந்த
திருடனேஉன்னையிப்போ சிறையிலடைத்தேன்பாராய்

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப் பிரகாரமாக அனுருத்திரனும் உஷாவுமாக மாளிகையிலிருப்பதை நாரதர் அறிந்து வாணாசூரனுக்கு சொல்ல வாணாசூரன் தவநிலையைவிட்டு கோபத்தோடுவந்து அனுருத்திரனை பிடித்து சிறையில்போட அந்த சமயத்தில் நாரதர் அனுருத்திரனை சிறையிலடைத்த சேதியை கிருஷ்ணனுக்கு தெரிவிக்க வடமதுரை செல்லுகின்றார்.

நாரதர் தரு

வடமதுரைதன்னைநாடியே நாரதமுனி
மகாவிஷ்ணுவைதேடிவாறாரே நாரதமுனி
பேரன்தன்னைசிறையிலடைத்திட்ட சேதிதன்னைசொல்ல
பிரியமுடன்ஓடிவாராரே நாரதமுனி

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரமாக அனுருத்திரனை சிறையிலடைத்த சேதி கிருஷ்ணனுக்குச் சொல்லவேண்டுமென்று வடமதுரைநாடி வருகிறபோது கிருஷ்ணமூர்த்தி சபைக்கு வருகிற விதங்காண்க.

கிருஷ்ணன் வருகிற கவி

பாவையர்கள் தன்னைக்கார்த்து பரந்தாமன் தானுமிப்போ
பன்னீராயிரம்ரிஷிகளுக்கு பாங்குடனேவரமேதந்த
கன்னியர் தன்னையானும் காதலுடனாதரித்த
கிண்ணரர்சங்கீதம்பாட கிருஷ்ணனும்வருகின்றேனே.

தரு

அசுரர்குலத்தையெல்லாம் அன்புடன்வேரறுத்த
அரிகிருஷ்ணதேவர்வந்தேன் இந்த

உலகத்வைஓர் அடியாய்அளந்த
அரிகிருஷ்ணதேவரும்வந்தேன்

பந்தமுடமுனேயானும் பாவையரிடத்தில்சென்று
பண்ணுதபங்கமெல்லாம் பாவையர்தன்னைசெய்தேன்

சுருள் பார்த்திபன்அர்ச்சுனன் எனக்குமைத்துனன் ஆச்சுதே
பூர்த்தியாய்எந்தனுக்கு தோழனுமாச்சுதே அ

தந்தவர்க்கன்சிசுபாலனை தரணிதனில்மடித்தேன்
தாட்சண்யமில்லாமலே தர்மர்யாகத்தைமுடித்தேன்

சுருள் தரணியிலெந்தனை தாளடிபணிவார்
அவனியிலெந்தனை யாவரும்துதிப்பார்

நித்தியபிர்மாசாரிபட்டம் வந்தவிதம்தன்னைக்கேட்ட
மங்கையாள்எட்டுபேருக்கும் மகிழ்வுடனேகாண்பித்தேன்

மாயவன்நானே அரி சீதரன்நானே
சுருள் மங்களமாகவே மாய்கையைக்காட்டினேன்
பொங்கமதாகவே பூவையர்மகிழ

கிருஷ்ணன் கவி

அருகினிலிருக்கும்எந்தன் அன்புள்ளமாதவாகேள்
எட்டுபட்டபுஸ்திரீகளில் ஏந்திழைசாம்பாவதியை
திட்டமாய்நீங்களோடி ஸ்ரீகிருஷ்ணர்அழைத்தாரென்று
பாவையாள்தன்னைநீங்கள் பாங்குடன்அழைத்துவாரீர்.

வசனம்

ஆனல் வாருங்கோள் மாதவா! நீங்கள் அரண்மனைக்குசென்று எட்டுபட்டப்புஸ்திரீகளில் சாம்பாதேவியை நாம் அழைத்தோம் என்று அதிசீக்கிரமாக அழைத்து வாருங்கள் மாதவா.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தபிரகாரமாக கிருஷ்ணதேவ ரானவர் சாம்பாதேவியை வரும்படி கட்டளையிட சாம்பாவதி சபைக்கு வருகிறவிதங் காண்க.

சாம்பாவதி வருகிற கவி

கண்டவர்அதிசயிக்க கங்கணவளைபல்மின்ன
அண்டர்கள்யாவரும்போற்ற அரிகிருஷ்ணன்தேவியான
பந்தமாய்பாவைமார்கள் பாங்குடன்ஆலாத்திஏந்த
சாம்பாதேவியானமாது தையலும்வருகின்றாளே.

சாம்பாவதி தரு

அலைகடலில்பள்ளிக்கொண்ட ஆதிமாயன்தேவியான
அருமைசிகாமணிவந்தாள் அன்புள்ளநாயகன்இன்பமாய்அழைத்திட
அருமைசிகாமணிவந்தாள்

பாம்பணையில்பள்ளிக்கொண்ட பரந்தாமன்தேவியான
பாவைசாம்பாவதிவந்தேன் பத்தியாய்நாதனைநித்தமும்கோரி
பாவைசாம்பாவதி வந்தேன்

அருகினில்அனேகமாதர் ஆலாத்திஏந்திசூழ
பெருமையுடன்நாதனை பேசிப்பணிவோமென்று

சாம்பாவதி சரணம்தரு

ஆயர்கள்தன்னைக்காத்த அரிவாசுதேவனே
அடியவள்சரணமையா சாம்பாவதி
அடியவள்சரணமையா

அண்டத்தைஓரடியாய் அளந்திட்டமாயனே
அசுரர்கள்தன்னையே வதைத்திட்டநேயனே அ

வசனம்

சரணம் சரணம் கோபியர்களை கார்த்து ரட்சித்த மணிவண்ணனே அடியவள் சாம்பாவதி நமஸ்கரிக்கின்றேன் என்னை இங்ஙனம் வரவழைத்த சங்கதிசொல்லும் நாதா.

கிருஷ்ணன் தரு

அடியவர்க்கருள்தரபெண்ணே உன்னை
அன்பாயழைத்தேனடிகண்ணே

பக்தருக்குவரம்தரபெண்ணே பாரினில்
அழைத்தேனடிகண்ணே

சாம்பவதி தரு

பஞ்சபாண்டவர்க்குநாதா நீரும்
பாரதம்முடிக்கப்போனீர்வேதா

பாஞ்சாலன்மகளான பத்தினிதுரோபதா
பாரினில்கூந்தலை வாரிமுடித்திட்டாளோ
சொல்லும் வார்த்தை புல்லும்

கிருஷ்ணன் தரு

துரியன்தன்னையேவீமன் துடையைமுரித்தபோது
துரோபதையாள்கூந்தலை தோகையாள்முடித்திட்டாள்
பாரினில்பாதத்தை பாவையரேயானும்சென்று
பட்சமுடன்நடத்தியே பைங்கொடிநான்இங்கேவந்தேன்

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப் பிரகாரமாக கிருஷ்ணமூர்த்தியும் சாம்பாதேவியும் ஒருவருக்கொருவர் வார்த்தையாடியிருக்க அந்த சமயத்தில் 'நாரதரானவர் வடமதுரை நாடி வருகிறார்.

நாரதர் தரு

வாணசூரனைபங்கப்படுத்தவே நாரதமுனி
பாங்குடனேஓடிவாராரே॥ நாரதமுனி
ஆதிமாயன்தன்னைக்கண்டாரே நாரதமுனி
ஆனந்தம்கொண்டுநின்றாரே

நாரதர் சரண தரு

தாத்தாசரணம் நாரதன்பணிந்தேன்
காத்தருள் தருணம்

ஈரேழுலோகத்தை இன்பமுடன் அளந்திட்ட
உன் இணையடிக்கே சரணம்

கிருஷ்ணன் தரு

வந்ததினால்எந்தனுக்கு மனதுசந்தோஷமாச்சு
சிரஞ்சீவியாய்இருப்பாய் நாரதனே

எந்தனைபணிந்ததாள்நாரதனே அப்பாநாரதனே
இங்குவந்தசேதியென்ன நாரதனே

நாரதர் தரு

பார்த்துவெகுநாளாச்சுதே தாத்தாவே ஓதாத்தாவே
உங்களைபார்க்கும்படிவந்தேனையா தாத்தாவே

ஒருவிஃதகாரணத்தால் தாத்தாவே ஓதாத்தாவே
வேகமுடன் ஓடிவந்தேன் தாத்தாவே

கிருஷ்ணன் தரு

விளம்புவேனென்றபோதேநாரதனே அப்பாநாரதனே
எனக்குவியாகுலமாகுதோடா நாரதனே

இந்தபாரெங்கும்சுற்றிவந்தாய்நாரதனே அப்பாநாரதனே
நீபார்த்துவந்தசேதிஎன்ன நாரதனே

நாரதர் தரு

உலகமெங்கும்பார்த்துவந்தேன் தாத்தாவே
ஒன்றும்அகப்படவில்லைதாத்தாவே ஒ தாத்தாவே
அருமையான அனுருத்திரனை அங்கே தாத்தாவே
அசுரன்கொண்டுபோய் சிறையிலடைத்தான்
தாத்தாவே ஒ தாத்தாவே

கிருஷ்ணன் தரு

அவனெந்தஅசுரனப்பாநாரதனே அப்பா நாரதனே
அறிவிக்கவேண்டும்சொன்னேன் நாரதனே
எந்தகாரணத்தாலே நாரதனே
என்பேரனைசிறையில்வைத்தான் நாரதனே

நாரதர் கவி

ஆவனியில்பேர்பெற்ற அனுருத்திரனைசிறையில்வைத்து
வாணசூரன்மகளான பைங்கொடிஉஷாவாரும்
சீருள்ளமஞ்சத்தின்மீது இருவர்நித்திரைசெய்யும்போது
தாதியவள்சித்திரளேக்கா தையலும்எடுத்துவந்தாள்.

வசனம்

கேளும் தாத்தாவே! சூந்திபட்டணம் வாணசூரன் மகளாகிய உஷா என்பவள் உமதுபேரனை தனது தாதியாகிய சித்திரளேக்காவைவிட்டு அனுருத்திரன் கட்டிலின்மீது நித்திரைசெய்யும்போது கட்டிலோடுஎடுத்து வந்தசேதி அறிந்து வாணசூரன் சிறையில் அடைத்தானையா தாத்தாவே.

கிருஷ்ணன் கவி

என்னமாய்மனம்துனிவேன் ஏந்திழையாளேகேளாய்
பந்தமாய்நானும்சென்று பாலகன்தன்னைஇப்போ
பார்த்துமேவருகவேண்டும் பாவைநீஇங்கிருப்பாய்
நேர்த்தியாய்சூரன்தன்னை நிமிஷத்தில்கொண்டுவாரேன்.

வசனம்

கேளும்பெண்ணே! சாம்பாவதி நமதுபேரனான அனுருத்திரனை வாணசூரன்மகள் கட்டிலோடு எடுத்துக்கொண்டுபோன சேதிதன்னை அவள் தகப்பனறிந்து நமதுபேரனை சிறையிலடைத்ததாக நாரதனால் தெரிந்துக்கொண்டேன் நான் இப்போது சென்று அந்தவாணசூரனை மடித்து பேரனைமீட்டுவரவேண்டும் நீ இங்கிருப்பாய் பெண்ணே சாம்பாவதி.

கிருஷ்ணன் சண்டைக்கு போகிற நொண்டிச்சிந்து

நாரதருரைத்தமொழிகேட்டு நானிலம்
புகழவேதானடந்தார்

பாரினில்பாணாசூரனை இன்று
பதைத்திடஉயிர்தனை கொல்லுவேனென்று

என்மாய்கையறியாமல் அசுரன்
எப்படியோபேரன்தன்னை சிறையில்வைப்பான்

பார்க்கிறேன்அவன்தீரம் இன்று
பகைதன்னைஇன்று முடிக்கிறேன்பார்

குந்திபட்டணம்வந்தோம் இப்போ
கொடும்பகைதன்னையான் இன்றுமுடிப்பேன் தந்தினம்

பொது வசனம்

நாரதர் சொன்ன வார்த்தையைக் கேட்டு கிருஷ்ணமூர்த்தி யானவர் குந்திபட்டணம் வந்தபோது பரமசிவன் காவலிருப்பதைப் பார்த்து கிருஷ்ணமூர்த்தி எதென்று சொல்லுகிற விதங்காண்க.

கிருஷ்ணன் கவி

சுடுகாட்டுஎலும்பையெல்லாம் தருக்கினில்பொறுக்கித்தின்று
திருவெண்காட்டுபேயெனநீர் இங்குவந்திருப்பதென்ன
மங்கையாள்மலை நீலியுங்கூட
மகிழ்ச்சியாய்நீங்களிங்கே வந்தவிதம்சொல்வீரே.

வசனம்

வாரும் ஓய் மைத்துனா சுடுகாட்டு எலும்புகளெல்லாம் பொறுக்கி சாப்பிட்ட புத்தியினாலல்லவோ அசுரனாகிய சூரனுக்கு வரங் கொடுக்க வந்ததினாலல்லவோ.

ஈஸ்வரன் கவி

பன்னீராயிரம் கோபிவீட்டில்
துடுப்பாலும் மத்தாலும்அடிபட்ட
இடையர்கள்வீட்டினில் வளர்ந்தவன்
எளிதம் பேசவந்தாய்
மடையனே அப்புறம்போ
மாருகநீ பேசவேண்டாம்
அலைகடலில் பள்ளிகொண்ட
அரிகிருஷ்ணரென்று அறிவேனேடா.

வசனம்

அடாவாடா கிருஷ்ணா நீர் என்னை எளிதமாக பேச வந்தாயல்லவா ஆயர்வீட்டில் மத்தாலும் துடுப்பாலும் அடிபட்டதை மறந்துவிட்டாய் உன்னை தெரியும்போங்காணும் மைத்துனா.

கிருஷ்ணன் தரு

ஏண்டாநான்ஆயர்வீட்டில் எடுத்ததினாலடித்தார்
எனக்குநீசொல்லிடுவாய் ஈஸ்வரனே
பத்மாசூரனுக்கேவரம் பாரினில்நீரும்தந்து
பட்டபாடுஅறியாயோ ஈஸ்வரனே
இன்றைக்குபெரியவரென்றுநீ அறியாமல்பேசுகின்றாய்
மைத்துனனே

ஈஸ்வரன் தரு

மாடுமேய்ப்பைவிட்டு மங்கையரிடத்தில்சென்று
மகாவிஷ்ணுநீரல்லவோ மைத்துனரே
ஆயர்களுடன்கூடி ஆடுமாடுமேய்த்திட்ட
அரிகிருஷ்ணனென்றபேருமேனோ மைத்துனரே

கிருஷ்ணன் கந்தார்த்தம்

மைத்துனாசொல்லக்கேளாய் மர்மமாய்பேசவேண்டாம்
அனுருத்திரன்தனைவிடுக்க அன்புடனேவழிநீவிடுவாய்
கடலினின்அலையைப்போல கடுங்கோபம்வருகுதப்பா
அரிவையும் நீருமாக,

தரு

அப்புறம்நீசென்றுவிடுவீர் மைத்துனரே
அப்புறம்நீசென்றுவிடுவீர்

அப்புறம்நீசென்றுவிடும் அனுருத்திரனிடம்செல்லவேண்டும்
ஆலழகன் தன்னைக்கண்டு அன்புடன்விடுவிக்கவேண்டும்

ஈஸ்வரன் தரு

வழிவிடும்என்றுஎன்னை வம்புவழக்கிட்டால்
வையகம்நகையாதோ மைத்துனா
வையகம்நகையாதோ

அறியாமல்வரங்கொடுத்து அவிதிபடகாலமாச்சே
அடியேன்வழிவிட தகுமோமைத்துனரே

வசனம்

ஆனால் வாரும் மைத்துனா நான் அறியாமல் வரத்தைக் கொடுத்துவிட்டேன் அந்த சூரானவன் என்னையே கோட்டைக்கு காவலாக வைத்திருக்கும்போது நான் எப்படி வழிவிடுவது நீர் சாமர்த்தியமுள்ளவனா யிருந்தால் என்னோடு எதிர்த்து யுத்தம் செய்து என்னை மடித்துவிட்டு போவாய் கிருஷ்ணா.

கிருஷ்ணன் கந்தார்த்தம்

சண்டைநீசெய்யவேசொன்ன சமர்த்துள்ளஆண்டிநீயும்
உந்தனைஇப்போநானும் உயிர்வதைசெய்யாமல்தான்
மொய்க்குழல்மீதில்நீயும் மோகிக்கும்படியாகத்தான்,

தரு

மோகனாஅஸ்திரமெடுத்தேன் பரமனேஉன்மேல்
மோகனாஅஸ்திரமெடுத்தேன்

மோகனாஅஸ்திரம்தன்னை மோதிஉன்மேல்விடுத்தேன்
ஆவலுடனேஅரன் அன்புடன்பூமியில்விழ

ஈஸ்வரன் ஜம்பை

பாவையெந்தன்பகிரதியே பட்சமுடன்உன்நினைவால்
ஆவிமெத்தபோகுதடி அரிவையெந்தன்கெங்கையாளே
மாயன்செய்தசூதினாலே மங்கையரேதியங்குறண்டி

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரமாக கிருஷ்ணமூர்த்தி யானவர் வாணாசூரன் கோட்டைக்குள் நுழைய செல்லுகின்ற போது பரமசிவனார் வழி விடமாட்டேன் என்று சொல்ல அந்தச் சமயத்தில் கிருஷ்ணமூர்த்தியானவர் மோகனாஸ்திரத்தை ஈசுரர் மேல் எய்ய பரமசிவன் பூமியில் விழுந்து பிரலாபிக்க அந்த சமயத்தில் கிருஷ்ண மூர்த்தியானவர் கோட்டைக்குள் நுழைந்து வாணாசூரனைப் பார்த்து ஒன்று சொல்லுகிற விதங்காண்க.

கிருஷ்ணமூர்த்தி கவி

பாரினில்புகழ்படைத்த வாணசூரனேசொல்லக்கேளாய்
அருமையென்பேரனான அனுருத்ரன்தன்னைநீரும்
சிறையினிலடைத்ததேதென்ன தீரனேசொல்லுமிப்போ
பாரினில்பாலகன்றன்னை பண்புடன்விடுவிடடா.

வசனம்

வாரும் வாணசூரனே என் பேரனான அனுருத்திரன் என்ன குற்றம் செய்தானென்று அவனை பிடித்து சிறையிலடைத்தாய் சொல்லும் வாணசூரனே.

வாணசூரன் கவி

ஆரடாயிங்கேவந்தாய் அறிவுகெட்டமூடனேகேள்
பாரினில்வாணசூரனென்றால் பயந்துமேநடுங்கிப்போவார்
கூரடாகோட்டைக்குள்வந்து கொடுமைகள்பேசுகின்றாய்
போராட்டம்செய்யவந்த பேயனேஅப்புறம்போடா.

வசனம்

அடாவாடா திருட்டுபையலே நீர் என்ன என்மாளிகைக்குள் வந்து அச்சமற்று பேசுகின்றாய் உன்னை என் கையிலிருக்கும் பாணத்திற்கு இறையாக்குவேன் ஓடி பிழைத்துப்போடா மூடனே.

கிருஷ்ணன் தரு

போடாவாடாவென்றுமே எந்தனைபேசுகிறாய்
எந்தன்புகழ்ச்சிஅறியாமல் வந்திங்கேவீசுகிறாய்
அசுரர்குலமதில்வந்துமே யுதித்திட்டதீரனே

சுருள் ஆணவங்கொண்டிங்கே பேசாதே
அடிப்பேனுன்பாணத்தால் வீசாதே
கெடுமதியறியாமல் கெர்வித்துபேசுறாய்
மடிக்குறேன்பாரிதோ மட்டிப்பயலேஉன்னை

வாணசூரன் தரு

மடிக்குறேன்பாரென்று வல்லமைபேசுறாய்தீரனே
உந்தன்மகிழ்ச்சியைநானறிவேன் வாதுநீபேசாதேபோடா

சுருள் வந்துமேஎன்னிடம் வாதுகள்பேசுறாய்
வார்த்தையினால்நீயும் மனமதுகூசுறாய்
பாரடாஉந்தனை பாணத்தால்கொல்லுகிறேன்

கிருஷ்ணன் தரு

ஆயிரம்சிரம்படைத்தவ னென்றுமேபேசுறாய்
இந்தஅவனியில்உன்புறட்டை நானறிவேன்போடா
காலம்நெருங்கிவிட்டதோ வந்துமேநீஇங்குகுதிக்கிறாய்

சுருள் கட்சிநீபேசுறாய் மூடனே
காலன்நான்வந்திட்டேன் தீரனே
கட்டியேபாணத்தால் எட்டிஅடித்தனடா

வாணசூரன் தரு

பரமனைவிடநீபலமுடையவனோ கிருஷ்ணனே
பஞ்சாகப்பறக்கஉன்னைபாரினில்மடிக்கிறேன் வீரனே
பார்த்திடயெவருமெச்சபாணத்தை கையில்எடுத்தேனே

சுருள் பட்டியேஉந்தனை மடிக்கிறேன்பாரிதோ
திட்டமாய்உன்சிரசை க்ஷணத்தில்நருக்கிறேன்
தாட்சின்னியமில்லைஇனி தப்பித்துக்கொள்ளடா

கிருஷ்ணமூர்த்தி கந்தார்த்தம்

தப்பித்துக்கொள்ளுமென்ற தடபடாசூரனேகேள்
அண்டரண்டம்கிடுகிடுவென்ன அவனியில்யாவரும்நடுங்க

துஷ்டனேஉன்னைக்கொல்ல தொடுத்திட்டேன்பாராய்
சக்கரம்தன்னால் மடித்திடவேநோாய்
அவனியோரறிய ஆங்காரகோபத்துடன்
தொடுத்திட்டேன் பாராய்

வாணசூரன் கவி

மடுவினில்உயிரைக்கார்த்த மாகாவிஷ்ணுவே போற்றி
அடியேன்நான்செய்யாதபிழை அன்புடன்கார்ப்பாய்போற்றி
படிதனில்கீர்த்திபெற்ற பரந்தாமாபோற்றிபோற்றி
சிறுவனுன்செய்தபிழையை சீதரா பொறுத்தருள்வீர்போற்றி.

வசனம்

மடுவினில் அத்தியென்கிற யானையை முதலையானது காலைப் பிடித்துக்கொண்டபோது ஆதிமூலம் ஆதியாய் விளங்காநின்ற கர்த்தனே என்றபோது யானைக்கு முத்திமோட்சம் கொடுத்து ஆதரித்த பரந்தாமனே எனக்கு உயிர்பிச்சை தாருமையா கண்ண பிரானே.

பரமசிவன் கவி

மைத்துனபதராதே நில்லும்நில்லும்
மகாதேவன்ஓடிவந்தேன் பதில்யான்சொல்ல
நான்கொடுத்தவரமது பொய்யாகாமல்
நாட்டினில்என்கீர்த்தி விளங்கவேண்டும்சொன்னேன்.

வசனம்

மைத்துன பதராதே நில்லும் நில்லும் மகாதேவ[illegible]
தேன் என்னுடைய வரமானது பொய்யாகாமல் [illegible]
என்றும் சாகாவரம் கொடுத்துவிட்டேன் அந்த [illegible]
ஆயிரம் சிரசில் ஒரு சிரசு இருக்கும்படி [illegible]
மைத்துன.

பொது வசனம்

அகோதெப்படி யென்றால் இ[illegible]
வாணசுரனுக்கு வரங்கொடுக்க [illegible]
சொல்லையும் தடுத்து திரிலே[illegible]
வார்த்தையையும் தடுத்து [illegible]
சூரனவன் பரமசிவத்[illegible]

சொல்லி வாக்குவாதம் செய்கின்றபோது பரமசிவன் நான் உனக்கு வரங்கொடுக்க வந்ததினால் அல்லவோ என்னை சண்டைக்கு அழைக்கின்றாய் என்று பரமசிவன் சொல்ல வாணாசூரான் நீர் விருதாப்பியான கிழவனானபடியால் என்னுடைய ஏழுசுற்று கோட்டையிருக்கின்றதே அதற்கு முன்வாசற்படி காவல் இருக்கவேண்டும் உனது தேவியாகிய பார்வதி இந்த கோட்டை முழுதும் சாணம் தெளிக்கவும் பெருக்கவுமாக இருக்கவேண்டும் என்று சொல்ல அப்படியே பரமசிவனும் பார்வதியும் காவல் புரிகின்றபோது மகாவிஷ்ணு சமராகிய யுத்தத்திற்கு கெருடனேறி வருகின்றார்.

மகாவிஷ்ணு சிந்து

சண்டைசெய்யவே நடந்தார் கிருஷ்ணமூர்த்தி
சண்டைசெய்யவே நடந்தார்
சண்டைசெய்ய மீறி மீறி
அண்டர்காண கெருடனேறி சண்

பொது வசனம்

இவ்விதமாக மகாவிஷ்ணுவானவர் சமருக்கு வருவதை மறுபடியும் வாணாசூரன் கண்டு ரதமேறி வருகிறவிதம் காண்க.

வாணாசூரன் சிந்து

அண்டமும் நடுங்கிடவே கண்டவர்ஓடி
நடுங்கிடவே அதட்டிபுரவிகளைத்
...னனே பதட்டமுடன்
...ம் ஓட்டினனே அண்ட

வாணாசூரன் கந்தார்த்தம்

...ந்தெதிர்த்த அரிகிருஷ்ணாசொல்லக்கேளாய்
...த்திற்கு எதிர்பாணம்நான்எடுத்தேன்
...ஞ்கொல்ல தடைபடாபாணமொன்று
...கொல்ல,

...ரு

...க்ராகாரம்கொண்டேனே
...சேவகம்செலுத்தவே
...லசாலிஉண்டோடா

மகாவிஷ்ணு கந்தார்த்தம்

மலைக்கிடா துரும்புயென்று மாணிக்கம்தனக்கீடாக
நிலைக்குமோஉந்தன்வாழ்வு நீமெத்தவீரங்கூறி
தலைக்கீழாய்விழவேஉன்னை தண்டிக்ககோபமீறி
துலைக்கவே உன்னைநானும்,

தரு

தூண்டிவந்தேனே உந்தனைக்கொல்லவேண்டிவந்தேனே
பூண்டகவசம்வில்லும் பொடிபடவாட்டியே
தாண்டிஉந்தனிட தலையையறுத்தேன்பாராய்

பொது வசனம்

அகோதெப்படி யென்றால் வாணாசூரனை மகாவிஷ்ணு இந்திரன் வச்சிரத்தாலும் சக்கராயுதத்தினாலும் அடித்து அவன் கரங்களையும் அறுத்து பூமியில் தள்ளின உடனே அந்த சூரன் பதைபதைத்து மூர்ச்சித்து விழுந்தான் அப்போது கிருஷ்ணர் தனது பேரனையும் காவலினின்று விடுவித்து அவனுடைய மனைவியையும் அழைத்து அவன் சம்பாதித்த சொத்துக்களையும் எடுத்துக் கொண்டு கெருடனேறி வடமதுரை வந்து உஷா தேவிக்கும் அனுருத்திரனுக்கும் விவாகம் செய்தார்கள் என்பதாம்.

சுபம்! சுபம்! சுபம்!

வாணாசூரன் சண்டை நாடகம்

முற்றிற்று.

பூமகள் புதிய நாடக விளம்பரம்

(பூமகள் பதிப்பை கவனித்து வாங்கவும்)

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்: இதன் அடியிற்கண்ட புத்தகங்களும், இன்னும் அநேகவிதமான புத்தகங்களும், எமது பூமகள்விலாசஅச்சுக்கூடத்தில் தகுந்த வித்வான்களைக் கொண்டு பிழையறச்சீர்திருத்தப்பட்டு அச்சிட்டுவருவதால் யாவரும் பூமகள் பதிப்பை கவனித்து வாங்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

(ரிஜிஸ்டர் செய்தது)	ரு	அ	ப
வள்ளி கலியாணநாடகம்	0	6	0
சிங்கீசர் கலியாணநாடகம்	0	5	0
ஸ்ரீராமர் அஸ்வமேதயாகமென்னும் குசலவநாடகம்	0	6	0
மாங்கனி சரித்திர நாடகம்	0	6	0
கம்ச சம்மாரநாடகம்	0	5	0
தொண்டரடிப்பொடியாழ்வார்நாடகம்	0	5	0
தாருகாவனரிஷி சரித்திரநாடகம்	0	5	0
கமலவல்லி நாடகம்	0	5	0
பத்மாவதி நாடகம்	0	5	0
நரகாசுர சம்மாரநாடகம்	0	5	0
சந்திரன் கர்வபங்கமென்னும் சந்திராம்பாள்நாடகம்	0	5	0
மணிமாலன் சண்டைநாடகம்	0	6	0
...மென் அர்ச்சுனன் யுத்தநாடகம்	0	6	0
...ாம ஆஞ்சநேய யுத்தநாடகம்	0	5	0
...தாண்டபத்தன் நாடகம்	0	8	0
...லியாணமென்னும் விநாயகர் கலியாணநாடகம்	0	6	0
...ணையநாடகம்	0	8	0
...ி மாலையிடுநாடகம்	0	6	0
...நாடகம்	0	6	0
...கம்	0	5	0
...நாடகம்	0	6	0
...டாசூர சம்மார நாடகம்	0	6	0
	0	5	0
	0	6	0

...முதலியார் ஸன்ஸ்

...ப்பிள்ளைவீதி, சென்னை.

5A
7-85